Diploma, Anna University-UG, PG., HSC & SSLC

*Notes*
*Syllabus*
*Question Papers*
*Results and Many more…*

*Available @*
www.AllAbtEngg.com

**KA** **இரண்டாம் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2019**

**பத்தாம் வகுப்பு** Reg.No.

**தமிழ்**

*நேரம்: 1.30 மணி* *மதிப்பெண்கள்: 50*

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக: 7 x 1 = 7

1. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது
   எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே
   அ) திருப்பதியும், திருத்தணியும் ஆ) திருத்தணியும், திருப்பதியும்
   இ) திருப்பதியும், திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும், பழனியும்
2. "செல்வத்தின் பயனே ஈதல்
   துய்ப்பேம் எனினே தப்புந பலவே" - என்று புறநானூற்றில் கூறியவர்
   அ) நக்கீரனார் ஆ) ஆவூர் மூலங்கிழார்
   இ) ஏணிச்சேரி முடமோசியார் ஈ) மாங்குடி மருதனார்
3. 'கூலம்' தரும் பொருள் _______.
   அ) உப்பு ஆ) வெற்றிலை இ) தானியம் ஈ) துணி
4. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் _______.
   அ) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது ஆ) என் மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
   இ) இகழ்ந்தால் இறந்து விடாது என் மனம் ஈ) என் மனம் இறந்து விடாது இகழ்ந்தால்
5. 'அறியா' என்பதன் இலக்கணக்குறிப்பு
   அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம்
   இ) வினைத்தொகை ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
6. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
7. ஆசிரியப்பா _______ முடிவது சிறப்பு.
   அ) ஆகாரத்தில் ஆ) ஏகாரத்தில் இ) பாயிரத்தில் ஈ) படிவத்தில்

பகுதி - II

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:** 3 x 2 = 6

8. பாசவர், வாசவர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
9. 'அறப்பணி ஓய்வதில்லை' - இதில் அறப்பணி என்பவை யாவை?
10. குறிப்பு வரைக - அவையம்.
11. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.
12. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக.

பகுதி - III

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:** 3 x 2 = 6

*(17-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)*

13. தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.
    அ) முத்தமிழ் ஆ) நானிலம்
14. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
    அ) மனக்கோட்டை ஆ) கண்ணும் கருத்தும்
15. சொற்களைப் பிரித்துப் பார்த்து பொருள் தருக:
    வருந்தாமரை
16. கலைச்சொற்கள் தருக:
    அ) Irrigation ஆ) Philosopher
17. மயங்கிய - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

Available in /AllAbtEngg Android App too, Also check www.SmartPoet.Net & www.PhotoShip.Net

Diploma, Anna University-UG, PG., HSC & SSLC
Notes
Syllabus
Question Papers
Results and Many more…
Available @
www.AllAbtEngg.com



## பகுதி - IV

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்: 3 x 3 = 9

*(22-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)*

18. 'முதல் மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவி பாடுகிறார்?
19. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
20. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
21. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
22. தூசும் துகிரும் - எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

## பகுதி - V

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்: 4 x 3 = 12

*(27-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)*

23. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
    கல்லார் அறிவிலா தார் - அலகிட்டு வாய்பாடு எழுதுக.
24. மொழிபெயர்க்க:

    Among the five geographical divisions of the Tamil country in Sangam Literature, the Martam region was the fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamils.
25. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக:
    புதுக்கோட்டை, புதுச்சேரி, கும்பகோணம், மயிலாப்பூர், உதகமண்டலம், கோயம்புத்தூர்
26. சாதனைப் பெண்மணி முகில்நாச்சி (எம்.எஸ்.சுப்புலெட்சுமி) பற்றி எழுதுக.
27. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:

    கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த
    குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
    ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
    உகந்த தண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமான மலரே
    மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
    மென்காற்றில் விளைசுகமே சுகத்தில் உறும் பயனே
    ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
    ஆடுகின்ற அரசே என் அலங்கல் அணிந்தருளே - *வள்ளலார்*

    1) பாடலின் மையக்கருத்து யாது? 2) மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
    3) இப்பாடலில் பயின்று வந்துள்ள அணி யாது?

## பகுதி - VI

விடை தருக: 2 x 5 = 10

28. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. *(அல்லது)*

    *குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக:*

    மாணவன் - கொக்கைப் போல, கோழியைப் போல - உப்பைப் போல - இருக்க வேண்டும். கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி - கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி
29. கடிதம் எழுதுக:

    நாளிதல் ஒன்றின் பொங்கல் மலரில் "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதல் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

    *(அல்லது)*

    உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி, ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக.

******

Available in /AllAbtEngg Android App too, Also check www.SmartPoet.Net & www.PhotoShip.Net